2nd April 1958]

சிறிய திட்டத்தை அவர் அனுப்பியிருக்கிறார். அது மேலும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இப்போதுள்ள நிதி நிலைமை இடமளிக்கும் அளவிற்கு அது குறைந்த செலவுள்ள திட்டமாக இருந்தால் அது எடுத்துக் கொள்ளப்படும்.

MR. SPEAKER : 527-வது கேள்வியையும் 528-வது கேள்வியையும் சேர்த்து எடுத்துக்கொள்வோம்.

Arrest of D.M.K. members.

* 527 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI AND SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state the number of the Dravida Munnetra Kazhagamites arrested throughout Tamilnad between 3rd and 6th January 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The total number of Dravida Munnetra Kazhagam members who were arrested in the State between 3rd January 1958 and 6th January 1958 was 2,122.

* 528 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Home be pleased to state the expenditure incurred in jails from 3rd January 1958 for the Dravida Munnetra Kazhagamites who were released after arrest and detention under section 151, Criminal Procedure Code?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rs. 1,569·17 nP.

SRI A. V. P. ASAITHAMBI : சென்னையில் ஏற்கெனவே இருந்த தடையுத்தரவை மீறியதாகவோ மீற முயன்றதாகவோ காரணம் கூறப்பட்டு பலர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், தமிழ் நாட்டில் இதர பகுதிகளில் திடீரென்று தடையுத்தரவைப் போட்டு அதை மீறியதாக பலரைக் கைது செய்யவேண்டிய அவசியம் என் ஏற்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி இந்த சபையில் ரொம்ப அதிகமாகப் பேசப்பட்டுவிட்டது. சர்க்காரும் நிலைமையை விளக்கியிருக்கிறார்கள். தவறு செய்பவர்கள் பேரிலும் தவறு செய்ய முற்படுபவர்கள் பேரிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு சர்க்கார் தயங்காது. இது குறித்து வருந்திப் பயனில்லை.

SRI A. A. RASHEED : Sir, what is the amount of fine collected from the Dravida Munnetra Kazhagam prisoners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry, Sir, I have no information.

SRI K. VINAYAKAM : Sir, has the Government got in their possession any idea of the number of those volunteers who subsequent to their arrest, tendered apology for their action, thus disowning their affiliation to the Dravida Munnetra Kazhagam?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information, Sir.

[2nd April 1958

Sri K. ANBAZHAGAN : க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடின் 151-வது பிரிவின்படி குற்றப் பாதுகாப்புக்காக பலர் சிறையில் வைக்கப் பட்டபோது, ஒரு பத்திரிகாசிரியரும் அந்தப் பிரிவின்படி சிறையில் வைக்கப் பட்டார் என்பதும், அவ்வாறு சிறையில் வைக்கப்பட்டவருக்கு பல முறை வேளைக்கு உணவு அளிக்கப்படவில்லை என்பதும் அரசாங்கத்திற்கு தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அது சம்பந்தமாக என்னிடம் ஒரு விவரமும் இல்லை.

Sri N. R. THIAGARAJAN : நானும் பல முறை சிறையில் இருந் திருக்கிறேன். சிறையில் இருந்த நேரத்தில் செக்கு இழுத்து, கல் உடைத்து, கேப்பைக் களி தின்றிருக்கிறேன்.

Mr. SPEAKER : அதற்கும் மூலக் கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?

Sri N. R. THIAGARAJAN : சிறையில் நாங்களெல்லாம் இப்படி வேலை செய்து கேப்பைக் களி சாப்பிட்டிருக்க, இப்பொழுது இவர்கள் வேலை செய்யாமலேயே சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சிறை அனுபவத்தைப் பற்றி கனம் அங்கத்தினர் சொல்வதை மற்ற அங்கத்தினர்கள் கேட்டு ரசித்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஒருவரைக் குற்றம் செய்வதிலிருந்து தடுப்பதற்கு க்ரிமினல் வழக்குமுறைச் சட்டம் 151-வது பிரிவுப்படி கைது செய்யலாம். ஆனால் ஜனவரி 3-ந் தேதி யிலிருந்து 6-ந் தேதி வரை 151-வது பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்டவர் களிலே 11 பேர்களைத் தவிர மற்றவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் ? அல்லது செய்ய முயற்சித்தார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேறு எத்தனையோ குற்றங்களைச் செய்ய முயற்சித்தார்கள். ஆனால், ஒவ்வொருவருடைய பெய ரையும் சொல்லி, யார் யார் என்ன குற்றம் செய்தார்கள் என்றுகருதப் பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்வதற்கு என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை.

Sri A. A. RASHEED : May I know from the Hon. Minister how the D.M.K. prisoners are distinguished from the other ordinary prisoners?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If any of the D.M.K. prisoners who is convicted is entitled to a higher class he will be given the higher class in the matter of treatment of prisoners.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சிறையில் வைக்கப்பட்ட கைதிகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்களுக்கும் எம்.பி.-க்களுக்கும் ஸ்பெஷல் வகுப்பு ஏன் கொடுக்கப்படவில்லை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தண்டனை அளிக்கப் பட்ட பிறகுதான் அந்த வகுப்புப் பிரச்னையெல்லாம் வரும். அதற்கு முன்னாலே வருவது இல்லை.

Mr. SPEAKER : Questions are over.